Your complimentary use period has ended. Thank you for using PDF Complete.
Click Here to upgrade to Unlimited Pages and Expanded Features

# …யாளிகளின் உரிமைகள்
# …ம் செய்து வைத்தல்

உலக பாரிசவாத அமைப்பு
www.world-stroke.org



6 நபர்களில் ஒருவருக்குப் பாரிசவாதம் ஏற்படுகின்றது அதாவது, ஒவ்வொரு வருடமும் 17 மில்லியன பாரிசவாதங்கள் ஏற்படுகின்றன.
அத்துடன்
6 மில்லியன உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன.

இவ்விலக்கங்களுக்குப் பின்பாகக் காணப்படுவது நிஜமான உயிர்களாகும்.

பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு நபரான எனக்குப் பின்வரும் உரிமைகள் உண்டு:



பாரிசவாதத்துக்கான மிகச்சிறந்த பராமரிப்பைப் பெற்றுக்கொள்ளல்.



பாரிசவாதத்தைப்பற்றிய விபரங்களை அறிந்து தயார்நிலைப்படுத்தப்படல்.



எனது உடல் நிலை தேறும் கால கட்டத்தில் ஆதரவையும், உதவியையும் பெற்றுக்கொள்ளல்.

PDF Complete
Your complimentary use period has ended. Thank you for using PDF Complete.
Click Here to upgrade to Unlimited Pages and Expanded Features

ரிமைகள் மசோதாவைப் பற்றிய மேலதிக தகவல்களுக்கு
நாடுங்கள்.

# உலகளாவிய பாரிசவாத நோயாளிகளின் உரிமைகள் மசோதா



பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு நபரான எனக்குப் பின்வரும் உரிமைகள் உண்டு:

## பாரிசவாதத்துக்கான மிகச்சிறந்த பராமரிப்பைப் பெற்றுக்கொள்ளல்.

- நான் சிகிச்சையைத் துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்காக, நோயை மிக விரைவாக இனங்காணல்.
- எனது பயணத்தின் சகல கட்டங்களிலும் (வைத்திய சாலையிலும் புனர்வாழ்வு காலப்பகுதியிலும்) ஒரு விசேட நிபுணத்துவக் குழுவினரால் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளல்.
- சிறந்த முறையில் ஒருங்கிணைக்கப்பட்ட பராமரிப்பைப் பெற்றுக்கொள்ளல்.
- பொருளாதார நிலைமை, ஆண் பெண் பாகுபாடு, கலாச்சாரம், எனது வாழிடம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாது சிகிச்சையை அணுகக்கூடியதாக இருத்தல்.
- ஒரு தனிப்பட்ட நபராக எனது வயது, பால்நிலை, கலாச்சாரம், இலக்குகள் மற்றும் காலப்போக்கில் மாற்றமடையும் எனது தேவைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு எனக்குப் பொருத்தமான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளல்.



## பாரிசவாதத்தைப்பற்றிய விபரங்களை அறிந்து தயார்நிலைப்படுத்தப்படல்.

- பாரிசவாதத்திற்கான அறிகுறிகளைப்பற்றிய விபரங்களை எனக்கு அறியத்தரல். இதன்மூலம் எனக்கு இந்நோய் ஏற்பட்டுள்ளதா என என்னால் அடையாளங்காண முடியும்.
- எனக்கு என்ன நடைபெற்றுள்ளது? என்பதைப்பற்றிய விபரங்களையும் எனக்குத் தேவைப்படும் காலம் வரைக்கும் எவ்வாறு பாரிசவாதத்துடன் வாழ்வது என்பதைப்பற்றியும் எனக்கு முழுமையாக அறியத்தரல்.



## எனது உடல்நிலை தேறிவரும் காலகட்டத்தில் ஆதரவையும் உதவியையும் பெற்றுக்கொள்ளல்.

- தற்போதும் எதிர்காலத்திலும் நோயிலிருந்து சுகமடைந்து நான் பெற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியமான சிறந்த உடல்நிலையைக் குறித்த நம்பிக்கையை வழங்கல்.
- எனது தேவைகளை மிகச்சிறந்த முறையில் சந்திக்கக்கூடிய வகையில் உளவியல் மற்றும் உணர்வு ரீதியான ஆதரவைப் பெற்றுக்கொள்ளல்.
- நான் கொண்டுள்ள எவ்வகையான உடல் ஊனத்தையும் பொருட்படுத்தாது சமுதாயத்தின் அனைத்து செயற்பாடுகளிலும் உள்ளடக்கப்படல்.
- நீண்ட காலப்பகுதியில் நான் பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக பொருளாதார மற்றும் இதர ஆதரவுகளைப் பெற்றுக்கொள்ளல்.
- எனக்குப் பாரிசவாதம் ஏற்பட்ட பின்னர் எனது தொழிலுக்கு மீண்டும் செல்வதற்கு அல்லது நான் தேர்ந்தெடுக்கும் ஏனைய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான ஆதரவைப் பெற்றுக்கொள்ளல்.
- எனக்குத் தேவையான சேவைகளை அணுகுவதற்கான அனுசரணையை வழங்குவதற்காக உத்தியோகபூர்வமான முறையிலும் உத்தியோகபூர்வமற்ற முறையிலும் ஆதரித்தலைப் பெற்றுக்கொள்ளல்.
- பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்ட ஏனையோருடனும் அவர்களுக்குப் பராமரிப்பை வழங்குபவர்களோடும் தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் பாரிசவாதத்திலிருந்து

PDF Complete
Your complimentary use period has ended. Thank you for using PDF Complete.
Click Here to upgrade to Unlimited Pages and Expanded Features

ஆதரவைப் பெற்றுக்கொள்ளவும் ஆதரவை
தல்.

உலக பாரிசவாத அமைப்பு www.world-stroke.org

# உலகளாவிய பாரிசவாத நோயாளிகளின் உரிமைகள் மசோதா

பாரிசவாதமானது அபிவிருத்தியடைந்த நாடுகளிலும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் இறப்புக்கான முன்னணிக் காரணியாக அமைவதுடன் உடல் ஊனத்திற்கான பிரதான காரணமாகவும் அமைகின்றது. ஒவ்வொரு வருடமும் 17 மில்லியனுக்கும் அதிகமான பாரிசவாதங்கள் ஏற்படுவதுடன் இந்நோயின் காரணமாக 6 மில்லியன் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. வயதையும், பால்நிலையும் பொருட்படுத்தாது, இரண்டு வினாடிகளுக்கு ஒரு முறை யாராவது ஒருவர் பாரிசவாதத்தினால் பாதிக்கப்படுகின்றார்.
இவ்விலக்கங்களுக்குப் பின்பாகக் காணப்படுவது நிஜமான உயிர்களாகும்.

இவ்வதிர்ச்சியூட்டும் புள்ளிவிபரங்களின் மத்தியிலும், பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்ட அநேகர் சிறந்த உடல் நலனையும் ஆரோக்கியமான, அதிக வளமான, சுதந்திரமான, வாழ்க்கையையும் வழங்கக்கூடிய மிகப்பெரிய வாய்ப்பான சிகிச்சைகள், புனர்வாழ்வு மற்றும் ஆதரவு ஆகியவற்றை அணுக முடியாதவர் களாகக் காணப்படுகின்றனர்.

பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டோரின் உரிமைகளுக்கான உலகளாவிய சட்டமூலமானது உலக பாரிசவாத அமைப்பினால் முன்னுரிமை வழங்கப்படும் முக்கியமான விடயமாகும். இவ்வுரிமைகளானது உலகெங்கிலும் பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டு உயிர்வாழும் அனைவருக்கும் அவர்களுக்குப் பராமரிப்பை வழங்குவோருக்கும் அவசியமான பராமரிப்புக்கான அம்சங்களை அடையாளங் காண்கின்றது.

இது, பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டோர் தமது உடல்நிலை தேறுவதற்கு மிகவும் முக்கியமான காரணிகளாக எவற்றைக் கருதுகின்றார்கள் என்பதைக் குறித்து பாரிசவாதத்துக்கான பராமரிப்பை வழங்குவோருடனும் அரசாங்கங்களுடனும் அவற்றின் முகமையகங்களுடனும் தொடர்பு கொள்வதற்குத் தனிப்பட்டோராலும் நிறுவனங்களினாலும் உபயோகிக்கப்படக்கூடிய ஒரு சாதனமாகும். பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டோரினால் முக்கியமாகக் கருதப்பட்டு, இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பராமரிப்பின் பல்வேறு அம்சங்கள், பாரிசவாதத்தினால் ஏற்படும் இறப்புக்களையும் உடல் ஊனங்களையும் குறைக்கின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

உலகளாவிய பாரிசவாத நோயாளிகளின் உரிமைகள் மசோதாவானது, ஒரு சட்டபூர்வமான ஆவணமல்ல. இது, பாரிசவாதத்துடன் தொடர்புடைய சாத்தியமாகக்கூடிய சிறந்த விளைவுகளுக்கும் அனுபவங்களுக்கும் இட்டுச்செல்வதற்கு பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டு உயிரோடிருப்பவர்களுக்கும், அவர்களுக்குப் பராமரிப்பை வழங்குவோருக்கும் அவசியமான பாரிசவாதத்துக்கான பராமரிப்புக்கூறுகளுக்கான வழிகாட்டியாகும்.

உலகளாவிய பாரிசவாத நோயாளிகளின் உரிமைகள் மசோதாவானது, உலகத்தின் ஒவ்வொரு பிராந்தியத்திலுமுள்ள பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டு உயிரோடிருப்பவர்களையும் அவர்களுக்குப் பராமரிப்பை வழங்குவோரையுங் கொண்ட ஒரு குழுவினரால் உருவாக்கப்பட்டது. உலகின் வெவ்வேறு பகுதிகளில் வித்தியாசங்கள் உள்ளனவா? என்பதைப் புரிந்துகொள்வதற்கான கருத்தாய்வுகளைப் பூர்த்தி செய்த வெவ்வேறு நாடுகளையும் கலாச்சாரங்களையும் மொழிகளையுங் கொண்ட பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டு உயிரோடிருப்பவர்களையும் அவர்களுக்குப் பராமரிப்பை வழங்குபவர்களையும இன்னும் ஆயிரக்கணக்கானோரையும் கொண்ட ஒரு பெரிய குழுவினரால் இவர்கள் ஆதரிக்கப்பட்டனர். பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டோர் எங்கு வாழ்ந்தாலும் பாரிசவாதத்திலிருந்து சுகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் முக்கியமெனக் கருதும் விடயங்கள் முரணற்று இருப்பதை அவர்களது பதில்கள் காண்பிக்கின்றன.

இச்செயல்முறையின் மூலம் இனங்காணப்பட்ட பிரச்சினைகள், பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டு உயிர்வாழ்வோரும் அவர்களுக்குப் பராமரிப்பை வழங்குவோரும் இவற்றுக்கு வழங்கிய முக்கியத்துவத்தின்

Your complimentary use period has ended. Thank you for using PDF Complete.

Click Here to upgrade to Unlimited Pages and Expanded Features

ாயாளிகளின் உரிமைகள் மசோதாவில்

இது உலகளாவிய ரீதியில் பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டோர் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதற்கு உபயோகமான சாதனம் என நாம் நம்புகின்றோம்.

உலக பாரிசவாத அமைப்பு www.world-stroke.org